## சாதனைகள் 'வாட்ஸ் ஆப்'பில்..!




தமிழ்நாடு அரசின் அனைத்துத் திட்டங்களையும் பொதுமக்கள் முழுமையாக அறிந்துகொண்டு பயனடையும் வகையில், தமிழ்நாடு அரசு செய்தி மற்றும் மக்கள் தொடர்புத் துறை சார்பில் ஏற்கெனவே ஃபேஸ்புக், டிவிட்டர், இன்ஸ்டாகிராம், யூடியூப் உள்ளிட்ட சமூக வலைத்தளப் பக்கங்கள் பராமரிக்கப்பட்டு வருகின்றன. தற்போது அடுத்தகட்ட முன்னெடுப்பாக "TNDIPR, Govt of Tamil Nadu" என்ற பெயரில் புதிதாக 'வாட்ஸ் ஆப்' சேனல் தொடங்கப்பட்டுள்ளது.

இந்த 'வாட்ஸ் ஆப்' சேனலில் பொதுமக்கள் இணைந்து அரசின் திட்டங்கள் குறித்து அறிந்துகொள்ளலாம். இந்த சேனலில் இணைவதற்கான க்யூ.ஆர். கோடு தமிழ்நாடு அரசு செய்தி மற்றும் மக்கள் தொடர்புத் துறை சார்பில் வெளியிடப்பட்டுள்ளது. இந்த க்யூ.ஆர். கோட் – ஐ ஸ்கேன் செய்து, அரசின் திட்டங்களை மக்கள் அறிந்துகொள்ளலாம். 'திராவிட மாடல்' அரசின் சாதனைத் திட்டங்களை எளிமையாக அனைத்துத் தரப்பு மக்களும் அறிந்துகொள்ளும் வகையிலான இந்தச் சிறப்பான ஏற்பாட்டினை அனைவரும் பயன்படுத்திக் கொள்வீர்..!

WhatsApp Channel — Other Social Media Link

## :ப்ளாஷ்பேக்





கே.ஆர்.டில்லிகுமார்

### சூரியனும் இளம்பிறையும்!

2011 மொழிப் போர் தியாகிகள் நினைவு நாள் பொதுக் கூட்டம் காஞ்சிபுரத்தில் நடைபெற்றது. அந்தக் கூட்டத்தில் தலைமை உரை ஆற்றிய முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் என் மகளுக்கு இளம்பிறை எனப் பெயர் சூட்டினார். 2014 ஆம் ஆண்டு என் குழந்தைகள் சூரியன், இளம்பிறை ஆகிய இருவரின் பிறந்தநாளில் குடும்பமாகத் தலைவர் கலைஞரைச் சந்தித்து வாழ்த்துப் பெற கோபாலபுரம் இல்லம் சென்றோம். தலைவருக்கு ஒருபுறம் சூரியனும், மறுபுறம் இளம்பிறையும் நின்று கொண்டு இருக்கும் இந்த புகைப்படம் என் வாழ்நாளில் மறக்க முடியாத படமாகும்.

**– கே.ஆர்.டில்லிகுமார், வட்டக் கழக முன்னாள் செயலாளர், காஞ்சிபுரம்.**

இது போன்ற அரிய புகைப்படங்களை சிறுகுறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம்.
அனுப்ப வேண்டிய முகவரி: அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை - 600 018. வாட்ஸ்அப் எண் : 90033–24473
மின்னஞ்சல்: youthwing@dmk.in

## கருவூலம்

### சாத்தையாறு அணை!

1958-ஆம் ஆண்டு மார்ச் மாதம் 8 மற்றும் 9 தேதிகளில் மதுரை மாவட்ட தி.மு.க மாநாடு, பழனியில் நடைபெற்றது. மதுரை மாவட்டத்தில், அலங்காநல்லூர் பாலமேடு வட்டத்தில் உள்ள சாத்தையாற்றில் அணைகட்ட வேண்டும் என அந்த மாநாட்டில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. அந்த அணை மூலம் பாலமேடு-நத்தம் வட்டாரத்தில், நூற்றுக்கணக்கான ஏக்கர்கள் நீர்வளம் பெற்று, விவசாய உற்பத்தியைப் பெருக்க முடியும் என கழகம் வலியுறுத்தியது. அணைக்கட்டை உடனடியாகக் கட்ட வேண்டும் என கழகம் போராடியதன் காரணமாக, 1965-ஆம் ஆண்டு அணை கட்டப்பட்டது.

# எல்லோருக்கும் எல்லாம்

**சு.விஜயபாஸ்கர்** 15

**அநீதிக்கு எதிரான நீதியின் குரல்! அதன் சட்ட வடிவமாம் இட ஒதுக்கீடு குறித்த வரலாற்றைப் பேசும் எல்லோருக்கும் எல்லாம்!**

## வங்கத்தில் சமூகநீதிக் குரல்!

இன்றைய வங்காளம் 17 கோடி மக்கள் வாழும் பங்களாதேஷ் எனும் நாடாகவும், 10 கோடி மக்கள் வாழும் இந்தியாவின் மேற்கு வங்கம் எனும் மாநிலமாகவும் பிரிந்து கிடக்கிறது. பங்களாதேஷ், மேற்கு வங்கம், பீகார், ஒடிஷா, அஸ்ஸாம், சத்தீஸ்கர் மாநிலத்தின் சிலபகுதிகள் ஆகியவை இணைந்த பிரிட்டிஷ் ஆளுகைக்கு உட்பட்ட அன்றைய வங்காளம், பிரிட்டிஷ் இந்தியாவின் மிகப்பெரிய மாகாணம். பிரிக்கப்படாத வங்காளம் 1905 இல் கிட்டத்தட்ட 8 கோடி மக்களைக் கொண்ட பெரும்பகுதியாக இருந்தது. பிரிட்டிஷ் ஆட்சிக்காலத்தில் பல ஆண்டுகளாக வங்காளத்தின் கவர்னர் தான் இந்தியாவின் கவர்னர் ஜெனரலாகவும் இருந்தார். 1911 ஆம் ஆண்டு வரை கல்கத்தா தான் இந்தியாவின் தலைநகராகவும் இருந்தது.

1905 இல் வங்காளத்தை கவர்னர் ஜெனரல் கர்சன் பிரபு மேற்கு, கிழக்கு வங்கம் என்ற இரு மாகாணங்களாகப் பிரித்தார். பிரிக்கப்பட்ட மேற்கு வங்கம் 5.4 கோடி மக்கள் தொகையைக் கொண்டிருந்தது. அதில் 4.2 பேர் இந்துக்கள், 1.2 பேர் முஸ்லீம்கள். அதே போல் கிழக்கு வங்கம் 3.1 கோடி மக்கள் தொகையைக் கொண்டிருந்தது. அதில் 1.3 பேர் இந்துக்கள், 1.8 பேர் முஸ்லீம்கள். மத அடிப்படையில் செய்யப்பட்ட இந்தப் பிரிவினைக்கு ஏற்பட்ட எதிர்ப்பின் காரணமாக 1912 இல் வங்காளம் மீண்டும் இணைக்கப்பட்டது. ஆனால் மொழி அடிப்படையில் பீகார், ஒடிசா, வங்காளம், அஸ்ஸாம் எனப் பிரிக்கப் பட்டது.



ஜெனரல் கர்சன் பிரபு

இந்தியச் சுதந்திரத்துக்குப் பின்னர் வங்காளம் மத அடிப்பட்டையில் மீண்டும் பிரிக்கப்பட்டு மேற்கு வங்கம் இந்தியாவுடனும், கிழக்கு வங்காளம் பாகிஸ்தானுடனும் இணைக்கப்பட்டது. 1971 ஆம் ஆண்டு வரை கிழக்கு பாகிஸ் தான் என்று அறியப்பட்ட கிழக்கு வங்காளம், அதன் பின்னர் பங்களாதேஷ் என்ற புதிய நாடாக மாறியது.

வங்காளம் மிகப்பெரிய மாகாணமாக இருந்ததால், நிர்வாகம் செய்வது கடினமாக இருக்கிறது என்றார் வங்காளத்தைப் பிரித்த கர்சன் பிரபு. மேற்கு வங்காளத்தின் இந்துக்களின் சமூகப் பொருளாதார நிலை மேம்பட்டும், கிழக்கு வங்காளத்தின் முஸ்லீம்களின் சமூகப் பொருளாதார நிலை அடித்தளத்திலும் இருக்கிறது என்பதாலும், கிழக்கு வங்காளம் வளர்ச்சியிலும், நிர்வாகத் திறனிலும் பின்தங்கி இருப்பதாலும், அதைத் தனி மாகாணமாக மாற்றி, அந்தப் பகுதியின் நிர்வாகத்தை மேம்படுத்தி, வளர்ச்சியை அதிகரிக்க இயலும் என்பது கர்சன் பிரபுவின் பார்வை. இந்தப் பிரிவினையை கிழக்கு வங்காளத்தின் முஸ்லீம்கள் ஆதரித்தனர். அதற்குக் காரணம் முஸ்லீம்களின் சமூகப் பொருளாதார நிலைமை மோசமாக இருந்ததும், மேற்கு வங்கத்தின் இந்துக்கள் வங்காளத்தின் ஆளுகையின் மீது ஆதிக்கம் கொண்டிருந்ததும்தான்.

**பிரிட்டிஷ் ஆளுகைக்கு உட்பட்ட வங்காளத்தில் இந்து - முஸ்லீம் பிரிவினையும் அதனை ஒட்டிய சமூக முரணியக்கங்களும் முன்னணியில் இருந்தன.**

ஆனால் மேற்கு வங்கத்தின் படித்த நடுத்தர வர்க்க இந்துக்கள் பிரிவினையை எதிர்த்துக் கிளர்ச்சி செய்தனர். இந்தப் பிரிவினையைத் தொடர்ந்து, ஆங்கிலேயருக்கு எதிரான எதிர்ப்பியக்கம் வளர்ந்து சுதேசி இயக்கத்தின் வீச்சை அதிகரித்தது. இவ்வாறாக பிரிட்டிஷ் ஆளுகைக்கு உட்பட்ட வங்காளத்தில் இந்து - முஸ்லீம் பிரிவினையும் அதனை ஒட்டிய சமூக முரணியக்கங்களும் முன்னணியில் இருந்தன. கல்வியிலும், சமூகப் பொருளாதார நிலையிலும் இந்துக்களுக்கு இடையே இருந்த ஏற்றத்தாழ்வு இந்து முஸ்லீம் பிரிவினைக்கிடையில் மங்கிக் கிடந்தது. ஆனால் சமத்துவத்தைக் கோரும் குரல்கள் ஒலிக்காமல் இல்லை.

...குரல் ஒலிக்கும்

# மாநாடு

**ர.பிரகாசு** 15

**திராவிட இயக்கம் பயன்படுத்தும் ஆயுதங்களில் மிக முக்கியமானது, மாநாடு. அந்த மாநாடுகளின் வரலாற்றை வாரம் ஒன்றாக வாசிப்போம்...**

## திருச்சி திருப்புமுனை!

ராபின்சன் பூங்காவில் திராவிட முன்னேற்றக் கழகம் உருவான நாளில் இருந்தே நாள்தோறும் கூட்டங்கள், போராட்டங்கள் என அரசியல் களத்தை தகிக்கச் செய்துகொண்டிருந்தது. தி.மு.கவைச் சமாளிக்க முடியாமல் திணறிக் கொண்டிருந்த அன்றைய ஆட்சியாளர்கள், 'வெட்ட வெளியில் நின்றுகொண்டு பேசும் முன்னேற்றக் கழகத்தால் சட்டமன்றத்திற்கு வந்து பேச முடியுமா?' என சவால்விட்டனர். சவாலை ஏற்க பேரறிஞர் அண்ணா ஆயத்தமானார்.

1955 ஆம் ஆண்டு ஏப்ரல் 4 ஆம் தேதி சென்னை தியாகராயர் நகரில் நடைபெற்ற, தி.மு.க பொதுக்குழுவில் எடுக்கப்பட்ட முடிவின்படி, 1956 ஆம் ஆண்டு மே மாதம் 17, 18, 19, 20 ஆகிய 4 நாட்கள் திருச்சியில் தி.மு.கழகத்தின் இரண்டாவது மாநில மாநாடு கூட்டப்பட்டது. அந்தப் பொதுக்குழுவில் தேர்வு செய்யப்பட்டிருந்த புதிய பொதுச் செயலாளரான நாவலர் நெடுஞ்செழியன் தலைமையில் மாநாடு கூடியது. அலங்கரிக்கப்பட்ட வாகனத்தில் நாவலர் நெடுஞ்செழியன் அழைத்து வரப்பட்டார். மாநாட்டுப் பந்தலின் முகப்பில் நின்று நாவலரை வரவேற்ற அண்ணா, அவருடைய கையில் கொடிக்கயிற்றைக் கொடுத்து ஏற்றச் செய்தார். மாலையில் என்.வி.நடராசன் மாநாட்டைத் திறந்துவைத்தார்.

**1957 ஆம் ஆண்டு நடைபெற்ற முதல் பொதுத் தேர்தலிலேயே 15 உறுப்பினர்களோடு சட்டமன்றத்தில் காலெடுத்து வைத்தது கழகம்.**

இரண்டாவது நாளில் பேசிய அண்ணா "தம்பி வா... தலைமையேற்க வா" என அழைப்பு விடுக்க, கழகத்தின் வருங்காலம் குறித்துப் பேசினார் நாவலர். முன்னணித் தலைவர்கள் பலரது பேச்சிலும், தி.மு.கழகம் தேர்தலில் பங்கெடுப்பதா, வேண்டாமா என்பதே மையப் பொருளாக இருந்தது. இந்த மாநாட்டுக்கு முன்பு நடைபெற்ற செயற்குழு, பொதுக்குழு இரண்டிலுமே தி.மு.க.-வின் தேர்தல் பயணம் குறித்து விவாதிக்கப் பட்டிருந்தது. மக்களாட்சியின் மகத்துவம் அறிந்தவரான அண்ணா, தி.மு.க.-வின் இந்த முடிவையும் மக்களே எடுக்க வேண்டுமென்று விரும்பினார். அதன்படி மாநாட்டின் கடைசிநாளில் நுழைவு வாயிலில் கருப்பு வண்ணப்பெட்டி ஒன்றும், சிவப்பு வண்ணப்பெட்டி ஒன்றும் வைக்கப்பட்டன. தி.மு.க. தேர்தலில் நிற்கலாம் என்பவர்கள் சிவப்புப் பெட்டியிலும், வேண்டாம் என்பவர்கள் கருப்புப் பெட்டியிலும் வாக்களிக்குமாறு கேட்டுக்கொள்ளப்பட்டது.



காலை 8 மணிமுதல் மாலை 4 மணிவரை நடைபெற்ற வாக்கெடுப்பில், 56,942 பேர் தி.மு.க. தேர்தலில் பங்கெடுக்கலாம் என்றும், 4,203 பேர் வேண்டாம் என்றும் வாக்களித்திருந்தனர். மக்கள் அளித்த வரலாற்றுச் சிறப்புமிக்க தீர்ப்பை அண்ணாவே அறிவித்தார். "மலைமுகட்டில் பெய்த பெரு மழை பேராறுகளாகி, அந்த பேராறுகள் சிற்றாறுகளாகி, அந்த சிற்றாறுகள் வாய்க்கால்கள் வழியோடி வயல்வெளிகளில் நீர்வளம் ஏற்படுத்தி, பயிர் செழிக்கச் செய்வதுபோல் மாநாட்டுப் பெருவெள்ளம் பட்டிதொட்டியெல்லாம் சென்று சேர்ந்து கழகத்திற்கு புது வலுவினை கொடுத்தது" என 'நெஞ்சுக்கு நீதி'யில் குறிப்பிட்டார் கலைஞர்.


அது வெறுமனே வலு மட்டும் அல்ல, திருச்சி தந்த முதல் திருப்புமுனை. 1957 ஆம் ஆண்டு நடைபெற்ற முதல் பொதுத் தேர்தலிலேயே 15 உறுப்பினர்களோடு சட்டமன்றத்தில் காலெடுத்து வைத்தது கழகம். அடுத்த தேர்தலிலேயே எதிர்க்கட்சி, அதற்கடுத்த தேர்தலிலேயே ஆளும்கட்சி என தி.மு.க.-வின் வளர்ச்சி இன எதிரிகளின் தூக்கத்தைத் தொலைக்கச் செய்தது. அன்று தொலைந்த தூக்கத்தை இன்றும் சிலர் தேடிக் கொண்டிருக்கிறார்கள். தொலைக்கச் செய்தவர் 'அண்ணா' என்பதை மறந்துவிட்டு!

...கூட்டம் திரளும்

## திராவிடத்தால் வாழ்கிறோம்

506

எழுத்து: கோவி.லெனின்
ஓவியம்: கி.சொக்கலிங்கம்




-வாழ்வோம்

Published and Printed by Karthikeyan Shanmugasundaram On behalf of Murasoli Trust at Murasoli Achagam, No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 Editor : Karthikeyan Shanmugasundaram Regn. No.7436, TN/CH (C) 261/24 - 26 RNI No.1244/57 WPP.No.TN/P.M.G. (CCR) W.P.P. 355/24-26. Phone : 28179191, 28179131